# அலகு -4

# மெய்ப்புத் திருத்தலும் நூலாக்கப் பணியும்

தமிழ் படித்தவர்கள் தமிழ் ஆசிரியராகத் தான் பணி செய்யவேண்டும் என்ற குறுகிய கண்ணோட்டம் இப்போது இல்லை. தமிழ் படித்தவர்கள் தாழ்வு மனப்பான்மையை கைவிட்டுவிட்டு வீறுடன் எழ வேண்டிய துறைகள் பல உள்ளன.

## மெய்ப்புத்திருத்தலில் ஏற்படும் பிழைகள்:

* ஏற்கனவே சுட்டிக்காட்டிய பிழைகள் சில களையப்படாமை.

* பிழை நீங்கும் முயற்சியில் புதிய பிழைகள் நேர்தல். கணிப்பொறி கோப்பில் இத்தகு தவறுகள் அதிகம்.

* கவனக்குறைவு காரணமாக, முன்பே சுட்டிக்காட்டாமல் விடுபட்ட பிழைகள்.

* வழக்கமான எழுத்துக்கு மாறாகப் புதிய வகை எழுத்துக்கள் ஒன்றிரண்டு சேர்தல்.

## தமிழ்த் தாத்தா:

ஓலைச்சுவடிகளில் மறைந்து கிடந்த தமிழ் நூல்களை வெளிக்கொணர்ந்து ஒப்பிட்டு அச்சேற்றிய தமிழ் தாத்தா டாக்டர் உ வே சா அவர்களுக்கு உறுதுணையாய் அமைந்து மெய்ப்புத் திருத்தியவர்கள. மெய்ப்பு, செம்மையாக அமையாவிடில் நூலாசிரியர் பெரிதும் பாதிக்கப்படுவர்.

## மெய்ப்புத் திருத்தப் பணி:

மெய்ப்புத் திருத்தப் பணி என்பது வாழ்நாள் முழுவதும் உழல வேண்டும். சேற்று நிலம் அல்ல., ஓரிரண்டாண்டு சிறப்பாக பணி புரிந்தால் படைப்புத் தொழிலில்

பற்றில்லாத வரும் திறமையற்றவருங்கூட, தாமே நூல்களைப் படைக்கின்ற குணம் பெறுவர்.

## மெய்ப்புத் திருத்த பணியில் முதற் கட்டம்:

மெய்ப்புத் திருத்தப் பணியில் காலடி எடுத்து வைக்க முதல் தகுதி. ஓரளவுக்கு இலக்கணம் தெரிய வேண்டும் என்பதே சந்திப் பிழைகள், எழுத்துப்பிழைகள். மரபுப் பிழைகள்- பால் -திணை இடை பிழைகள் யாவை என்று ஓரளவுக்கு தெரிய வேண்டும்.

ரகற -றகர வேறுபாடு, லகர -ளகர ழகர வேறுபாடு, ணகர -நகர வேறுபாடு, ஆகியவை தெரிந்தாக வேண்டும்.

## கூரிய பார்வை:

எழுத்தெண்ணிப் படித்தவர்- என்பது மிகையான தொடராக

தோன்றலாம். மெய்ப்புத் திருத்துநருக்கும் இப்பண்பு தாராளமாக அமைய வேண்டும். கணிப்பொறி கோப்பில் அளவற்றப் பிழைகள் தோன்றுகின்றன.

## பொறுமை தேவை:

மெய்ப்புத் திருத்துநருக்கும் அணிகலம் பொறுமையாகும். மிகப் பொறுமையுடனே ஏட்டையும் மெய்ப்பையும் ஒப்பிட்டு நோக்கியே திருத்த வேண்டும்.

## செய்ய வேண்டியவை:

*ஒப்பு நோக்கல்,

* பிழைகளைத்திருத்தல்,

* எழுத்துகளை சரிபார்த்தல் ,

* நிறுத்தற்குறியிடல்,

* வனப்பினைச் சேர்த்தல்.

## பாராட்டும் நன்றியும்:

மெய்ப்புத் திருத்தப் பணி, ஊதியந் தருவது மட்டுமன்று நூலாசிரியர்கள் உள்ளம் நெகிழ்ந்து மெய்ப்பாளர்களை நன்றியுடன் பாராட்டி சிறப்பு செய்வது.

## உ. வே. சா பாராட்டுரை:

இப்பதிப்பு திருத்தமாக வெளி வருவதற்கு முத்தியாலுபேட்டை உயர்நிலைப் பள்ளி தமிழாசிரியர் திரு. புலவர். எஸ். சீனிவாசன் அவர்கள் உதவி புரிந்த மைக்கு நன்றி பாராட்டுகின்றேன் என்கிறார்.

.